1982 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டே ஆர்டர் வாங்கிய பிறகு நங்கள் கூப்பிட்டு சம்பந்தப்பட்ட சட்ட அதிகாரிகளிடம் உடனடியாக அதை வெக்கேட் செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்கிறோம். குறிப்பாக கைத்தறி நெசவாளர் சட்டத்தைக் கூட அவர்கள் மாஸ்டர் வீவர்கள் சென்று ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசுவதாகக் கூட இருக்கிறேன். அதற்குக் கூட தேதி குறிப்பிட்டுச் சொல்லி இருப்பதாக எனக்கு ஞாபகம். இதில் எல்லாம் பலன் கிடைக்கும் என்று நான் நம்பவில்லை. கோர்ட்டுக்கு என்று போகிறவர்கள் நாங்கள் சொல்கின்ற காரணத்திற்காகவே வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்வார்கள். ஆனால் நாம் பன்னிப்பன்னி கேட்டுக்கொள்வதெல்லாம் அருள் கூர்ந்து சட்டங்களை எதிர்த்து ஸ்டே ஆர்டர் வாங்குவதற்கு வழக்கு மன்றத்திற்குச் செல்லவேண்டாம் என்று, அப்படியே நீங்கள் வெற்றி பெற்றால்கூட சட்டத்தை மறுபடியும் திருத்தி எந்த நோக்கத்தோடு அரசு அதைக் கொண்டு வந்ததோ, அதை மீண்டும் கொண்டு வருவதற்கு நிச்சயம் அரசு செய்யும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்வது நலம் என்று கருதுகிறேன்.

சோழவந்தான் தொகுதியிலுள்ள ஒரு போக விளைச்சல் நிலங்களை இருபோகமாக மாற்றும் திட்டம்

*வினா எண். 34 —திரு ஏ. சந்திரசேகரன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சோழவந்தான் தொகுதி, தனச்சியம், சித்தாளங்குடி, சி. புதூர், சம்பக்குளம் திருவாயை நல்லூர் ஆகிய கிராமங்களில் உள்ள ஒரு போக விளைச்சல் நிலங்களை, பெரியார் கால்வாய் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொண்டு மேற்படி நிலங்களில் இருபோகம் சாகுபடி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) :சி. புத்தூர் கிராமம் தவிர ஏனைய கிராமங்களில் ஒரு போக நிலங்களாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்கள் உரிய அங்கீகாரம் இன்றி, இரு போக நிலங்களாக விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறான மாமூல் கோடை நிலங்கள் மற்றும் மேட்டுப் பகுதி நிலங்கள் பெரியாறு வைகை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் முறைப்படுத்தப்படும். இது தவிர மேற்படி கிராமங்களில் ஒரு போக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.